நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள். 25.03.2022

## சாதாரண கூட்டம்

**பிலவ வருடம் பங்குனி மாதம் 11 ஆம் தேதி 2022ம் வருடம் மார்ச் மாதம் 25ம் தேதி (25.03.2022) வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருக்கிற அம்பாசமுத்திரம் நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 25.03. 2022 | 4 | **பொருள் எண்: 1**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் மன்றத்தின் பார்வைக்கு.<br>தமிழகத்தில் 2016ம் ஆண்டு முதல் 2022 பிப்ரவரி மாதம் வரை சுமார் ஆறு ஆண்டு காலம் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் காலதாமதம் ஏற்பட்டதை மாற்றி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை வெற்றிக்கரமாக நடத்திய **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் இயற்றுதல். | நன்றி அறிவிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |
| 25.03. 2022 | 5 | **பொருள் எண்: 2**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>கீழம்பாசமுத்திரம் வருவாய் கிராமம் சர்வே எண் 354/1பி, 355/1எ, 585/2, 5வது வார்டு ஆசிரியர் காலனியில் சிறுவர் விளையாடும் இடம் திறவிடம் என உள்ளது. அதன் பரப்பளவு 32 செண்ட் ஆகும். இதனை நகராட்சியின் பொது உபயோக பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு நிலவகை மாற்றம் செய்திட திருநெல்வேலி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 25.03. 2022 | 6 | **பொருள் எண்: 3**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குரிய கோவில்குளம் தொடக்கப்பள்ளி, முடப்பாலம் தொடக்கப்பள்ளி, ஊர்க்காடு தெற்கு காலனி தொடக்கப்பள்ளி, சந்தை பஜார் நடுநிலைப்பள்ளி, ரகுமான் காலனி தொடக்கப்பள்ளி மற்றும் தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள கல்யாண மண்டபம் ஆகியவற்றை நகராட்சியே பராமரிக்கும் பொருட்டு நகராட்சியிடம் ஒப்படைப்பு செய்திட அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 25.03. 2022 | 7 | **பொருள் எண்: 4**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>**1.** 12வது வார்டு – பூங்காவனம் தெருவில் கழிவுநீர் வடிகால்கள் அமைத்தல்.<br>**2.** 18வது வார்டு – தெப்பகுளம் தெருவில் கழிவுநீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் பேபர் பிளாக் சாலை அமைத்தல்.<br>**3.** 18வது வார்டு – தெப்பகுளம் தெருவில் சிறு மின்விசை குடிநீர் தொட்டி அமைத்தல்.<br>**4.** 18வது வார்டு – ஆற்றுச்சாலையின் இருபுறமும் பேவர் பிளாக் நடைபாதை அமைத்தல்.<br>**5.** 18வது வார்டு – ஆற்றுச்சாலையில் அனைத்து தெருக்களிலும் கழிவுநீர் வடிகால்கள் அமைத்தல்.<br>**6.** 18வது வார்டு – சோலைபுரம் தெற்கு தெரு முத்துபெட்டிகடையின் கீழ்புற சந்தில் பேபர் பிளாக் சாலை அமைத்தல்.<br>**7.** 18வது வார்டு – தோணித்துறைக்குரிய 90mm PVC குடிநீர் விநியோக | நிதிநிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | குழாயில் அடிக்கடி உடைப்புகள் மற்றும் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. அப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட ஏதுவாக கல்லிடைக்குறிச்சி மெயின் ரோடு அபிராமி தியேட்டர் முதல் கிருஷ்ணன் கோவில் தெரு பொதுநூலகம் வரை புதிய குழாய்கள் அமைத்தல்.<br>**8.** 18வது வார்டு – காசிபநாத சுவாமி கோவில் தெருக்களில் (ஆற்றுச்சாலை தெரு) குடிநீர் குழாய்கள் விஸ்தரிப்பு செய்தல்<br>**9.** 18வது வார்டு – சோலைபுரம் தெற்கு தெரு, அம்மன் கோவில் கீழ்புறம் திரு. கார்த்திகேயன் என்பவரது வீட்டிலிருந்து நதியுண்ணி கிளை கால்வாய் வரை உள்ள முடுக்கில் வாறுகால் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைத்துத் தர கேட்டல்.<br>**10.** 18வது வார்டு – சோலைபுரம் தெற்கு தெரு, பிரகாஷ் பெட்டி கடை முதல் நதியுண்ணி கிளை கால்வாய் வரை உள்ள முடுக்கில் வாறுகால் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைத்துத் தர கேட்டல்.<br>**11.** 18வது வார்டு – சோலைபுரம் தெற்கு தெரு, எல்ஐசி நல்லபெருமாள் வீடு முதல் நதியுண்ணி கிளை கால்வாய் கரை ராஜம் வீடு வரை உள்ள முடுக்கில் வாறுகால் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைத்துத் தர கேட்டல். | |
| 25.03. 2022 | 8 | **பொருள் எண்: 5**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள நதியுண்ணி கால்வாயில் உள்ள சோலைபுரம் தெரு, ஆற்றுச்சாலை (காசிபநாத சுவாமி கோவில் தெரு), சங்கர் தெரு, கன்னிவிநாயகர் கோவில் தெரு ஆகிய வாய்க்கால் பாலங்களை பழுது நீக்கம் செய்திட தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அவைகளை பழுது நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப்ப டுகிறது. |
| 25.03. 2022 | 9 | **பொருள் எண்: 6**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி மேலம்பாசமுத்திரம் வருவாய் கிராமம் புல எண் 370A/10 (பழைய புல எண் 1254/2) ல் அமைந்துள்ள சந்தை திரு. S.R. கல்யாண வெங்கட்ராமராஜா என்பவரால் நடத்தி வரப்பட்டது. மேற்படி சந்தை அமைந்துள்ள இடம் அரசு புறம்போக்கு என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து நகராட்சி மூலம் சந்தை நடத்தப்பட்டு வியாபாரிகளிடம் கட்டணம் நாளது வரை வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் மேற்படியார் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்திருந்தார். தற்போது இவ்வழக்கு தள்ளுபடியாகி விட்டது. ஆகையால் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேற்படி இடத்தை (ஏக்கர் 1, செண்ட் 52) நகராட்சிக்கு வழங்கிட கேட்டும் அதற்குரிய முன் நுழைவு அனுமதி (Enter upon permission) வழங்க கேட்டும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கருத்துரு சமர்பித்திட மன்றம் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப்ப டுகிறது. |
| 25.03. 2022 | 10 | **பொருள் எண்: 7**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் தெருவிளக்குகள் பொருத்திடவும், தெருவிளக்குகள் பழுது நீக்கம் செய்திடவும், தெருவிளக்கு பணியாளர்கள் அப்பணிகளை விரைந்து செய்திட ஏதுவாக தூக்கும் வாகனம் (Liftmake Vehicle) ஒன்று வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப்ப ட்டது . |
| 25.03. 2022 | 11 | **பொருள் எண்: 8**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு. கே.கே.சி. பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் சாலையிலுள்ள முட்புதர்களை **JCB** இயந்திரம் மூலம் அப்புறப்படுத்திட | அனுமதி வழங்கப்ப ட்டது . |

| | | | |
|---|---|---|---|
| | | மன்றத்தின் அனுமதிக்கு | |
| 25.03.2022 | 12 | **பொருள் எண்: 9**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற துணைத்தலைவர் திரு. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 3வது வார்டு – ஹைஸ்கூல் ரோடு பொதுக் கிணற்றின் அருகில் சிறு மின்விசை குடிநீர் தொட்டி அமைத்தல்.<br>2. 3வது வார்டு – வேலாயுத நகர் பொதுக் கிணற்றின் அருகில் சிறு மின்விசை குடிநீர் தொட்டி அமைத்தல்.<br>3. 3வது வார்டு – ஹைஸ்கூல் ரோடு மேல்புறமுள்ள நியூ காலனியில் குடிநீர் விநியோக குழாய்கள் நீட்டிப்பு செய்து தர கேட்டல்.<br>4. 3வது வார்டு – ஹைஸ்கூல் ரோடு மேல்புறமுள்ள நியூ காலனி பகுதியில் செல்லும் பெரியகுளம் மறுகால் ஓடையின் கீழ்புறமுள்ள தடுப்பு சுவரை உயர்த்தி அமைத்து தர கேட்டல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03.2022 | 13 | **பொருள் எண்: 10**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 5வது வார்டு உறுப்பினர் திருமதி. சு. அழகம்மை அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 5வது வார்டு – முடப்பாலம் பகுதியில் சமுதாய நலக்கூடம் அமைத்தல்<br>2. 5வது வார்டு – முடப்பாலம் புதுக்காலனியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல்.<br>3. 5வது வார்டு – முடப்பாலம் புதுக்காலனியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் இல்லாததால் புதிய குடிநீர்இணைப்புகள் வழங்கிட அப்பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03.2022 | 14 | **பொருள் எண்: 11**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 7வது வார்டு உறுப்பினர் திரு. வை. ராமசாமி அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 7வது வார்டு – மறுகால் ஓடையை சீரமைத்து நிரந்தர தீர்வாக சிமெண்ட் லைனிங் அமைத்தல்.<br>2. வாணுவர் தெருவில் கோவில் வரை பேவர் பிளாக் தளம் அமைத்தல்.<br>3. யாதவர் கீழத் தெருவில் பஜனை மடம் பின்பிறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03.2022 | 15 | **பொருள் எண்: 12**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 11வது வார்டு உறுப்பினர் திருமதி. சி. பேச்சியம்மாள் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 11வது வார்டில் உள்ள அனைத்து தெருக்களிலும் கழிவுநீர் ஓடைகளை பராமரிப்பு செய்தும், கழிவுநீர் ஓடை இல்லாத பகுதிகளுக்கு புதிய கழிவுநீர் ஓடை அமைத்து தர கேட்டல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03.2022 | 16 | **பொருள் எண்: 13**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 17வது வார்டு உறுப்பினர் திருமதி. க. மாரியம்மாள் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 17வது வார்டு – புதுகிராமம் தெரு பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் பொருட்டு மேலதிருமஞ்சனம் ரோடு – அடப்பு தெரு சந்திப்பில் இருந்து பூக்கடை சந்திப்பு வரை புதிய குடிநீர் விநியோக குழாய்கள் பதித்தல்.<br>2. 17வது வார்டு – பஞ்சாயத்து போர்டு தெருவில் நகராட்சி அலுவலகம் பின்புறம் குடிநீர் விநியோக குழாயை விஸ்தரிப்பு செய்து SCOUR VALVE அமைத்து தர கேட்டல்.<br>3. 17வது வார்டு – பஞ்சாயத்து போர்டு தெரு STC நடுநிலைப்பள்ளி பின்புறம் உள்ள கழிவுநீர் ஓடையை தூர்வாரி பராமரிப்பு செய்து | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |

| | | | |
|---|---|---|---|
| | | நதியுண்ணி கால்வாய் வரை இருபுறமும் சிமெண்ட் தள கரை அமைத்துத் தர கேட்டல்.<br>4. 17வது வார்டு – சங்கர் தெருவில் உள்ள அடிபம்பு இருக்கும் இடத்தில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து 2 நல்லிகள் அமைத்து தரக் கேட்டல் | |
| 25.03. 2022 | 17 | **பொருள் எண்: 14**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 19வது வார்டு உறுப்பினர் திருமதி. ச. ஜோதிகலா அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 19வது வார்டு – தெற்கு ரதவீதியில் ஊர் அம்மன் கோவில் முதல் விவசாய பண்ணை வரை சாலையின் தென்புறம் கழிவுநீர் வடிகால் அமைத்து தர கேட்டல்.<br>2. 19வது வார்டு – மேலரதவீதியில் உள்ள இரண்டு கழிப்பிடங்களையும் OHT அருகில் உள்ள ஒரு கழிப்பிடத்தையும் மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர பராமரிப்பு பணிகள் செய்து தர கேட்டல்.<br>3. 19வது வார்டு – தெற்கு ரத வீதியில் உள்ள பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை இரண்டையும் பராமரிப்பு பணிகள் செய்து தர கேட்டல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03. 2022 | 18 | **பொருள் எண்: 15**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 20வது வார்டு உறுப்பினர் திரு. ம. வேலுச்சாமி அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 20வது வார்டு – ஆசாரிமார் தெருவில் ரோட்டை உயர்த்தி பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைத்தல்<br>2. 20வது வார்டு – கோட்டியப்பர் மாட வீதியில் பேபர் பிளாக் சாலை அமைத்தல்.<br>3. 20வது வார்டு – மேலக்காலனி, கீழக்காலனி மற்றும் அருந்ததியர் தெரு ஆகியவற்றில் பேபர் பிளாக் சாலை அமைத்தல்.<br>4. 20வது வார்டு – தேவமார் வடக்கு தெரு பால்பண்ணை முருகன் வீட்டின் அருகேயுள்ள வாறுகாலை பழுது நீக்கம் செய்து தர கேட்டல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03. 2022 | 19 | **பொருள் எண்: 16**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 21வது வார்டு உறுப்பினர் திரு. ஆ. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 21வது வார்டு – அனைத்து முடுக்குகளிலும் பேவர் பிளாக் தளம் அமைத்து தர கேட்டல்<br>2. வாறுகால் பாலங்கள் பராமரிப்பு செய்திட<br>3. தெற்கு தெரு வாறுகால் ஓடை பராமரிப்பு செய்து தர கேட்டல்.<br>4. இடுகாட்டில் தகனமேடை மற்றும் மயான கூரை அமைத்து தர கேட்டல்.<br>5. தெற்கு காலனி முப்பிடாதி அம்மன் கோவில் முன்புறம் பேவர் பிளாக் தளம் அமைத்து தர கேட்டல்.<br>6. தெற்கு காலனி தெருவில் அனைத்து முடுக்குகளிலும் வாறுகால் அமைத்து, பேவர் பிளாக் தளம் அமைத்து தர கேட்டல்.<br>7. ஓடைத் தெருவில் தார்சாலையின் உயரத்தை குறைத்து புதிய தார் சாலை அமைத்து வாறுகால் பராமரிப்பு செய்து தர கேட்டல்.<br>8. வேளார் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல்<br>9. வேளார் தெருவில் சிறுமின்விசை குடிநீர் தொட்டி அமைத்தல்.<br>10. தங்கம்மன் கோவில் தெருவில் அனைத்து முடுக்குகளிலும் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.<br>11. தங்கம்மன் கோவில் தெரு ராமகிருஷ்ணன் என்பவர் வீட்டிலிருந்து கிட்டன் என்பவர் வீடு வரை வாறுகால் அமைத்தல்.<br>12. தங்கம்மன் கோவில் தெரு ராமகிருஷ்ணன் வீட்டருகில் வாறுகால் பாலம் அமைத்தல்.<br>13. சேனையர் தெற்கு தெரு கடைசியில் வாறுகால் பராமரிப்பு செய்து தர கேட்டல்.<br>14. சேனையர் தெரு அனைத்து முடுக்குகளிலும் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.<br>15. காமாட்சி அம்மன் கோவில் அருகில் சிறு மின்விசை குடிநீர் தொட்டி | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |

| | | | |
|---|---|---|---|
| | | அமைத்தல்.<br>16. ரைஸ்மில் முதல் கிழக்கே தாமிரபரணி ஆற்றுக் கரை வரை தார் சாலை சீரமைத்தல். | |
| 25.03. 2022 | 20 | **பொருள் எண்: 17**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 1வது வார்டு உறுப்பினர் திரு. K.S.R மாரிமுத்து அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 1வது வார்டு – R.S காலனி பிள்ளையார் சன்னதி தெரு மற்றும் பயணியர் விடுதி ரோடு, திருவள்ளுவர் நகர் திலகர்புரம் மெயின் ரோடு Zion Hardware அருகில் உள்ள தெரு மற்றும் பண்ணை சங்கரய்யர் நகர் மேற்கு பகுதி முதல் தெரு மற்றும் குறுக்கு தெரு ஆகியவற்றில் வாறுகால் அமைத்தல்.<br>2. 1வது வார்டு – R.S காலனி 2வது மற்றும் 3வது குறுக்கு தெரு மற்றும் திருவள்ளுவர் நகர் மேல ரோடு ஆகியவற்றில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்<br>3. 1வது வார்டு – அய்யனார்குளம் தெற்கு தெரு மற்றும் கீழ தெரு ஆகியவற்றில் வாறுகால் சீரமைத்து பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>4. 1வது வார்டு – பண்ணை சங்கரய்யர் நகர் சிறுவர் பூங்காவை பண்ணை சங்கரய்யர் நகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேம்படுத்துதல் | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம். வரிசை 4ல் உள்ள கோரிக்கை நமக்கு நாமே திட்டத்தில் அனுமதி வழங்க இயலாது. |
| 25.03. 2022 | 21 | **பொருள் எண்: 18**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 15வது வார்டு உறுப்பினர் திரு. S. சிவகுமார் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. அடப்பு தெரு முடுக்கில் புதிதாக பேவர் பிளாக் சாலை மற்றும் வாறுகால் அமைத்தல்.<br>2. 15 மற்றும் 16வது வார்டுக்குட்பட்ட பகுதியில் அங்கன்வாடி மையம் அமைத்தல்.<br>3. வடக்கு புதுமனைத் தெருவில் பள்ளிக்கூடம் அருகிலுள்ள பாலத்தை சீரமைத்தல்.<br>4. திருமஞ்சன ரோட்டில் உள்ள பாலத்தில் தடுப்பு சுவர் அமைத்தல். | நிதி நிலையை ஆராய்ந்து அனுமதி வழங்கலாம் . |
| 25.03. 2022 | 22 | **பொருள் எண்: 19**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 8வது வார்டு உறுப்பினர் திருமதி. G. சித்ராதேவி அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. பெரியகுளம் மறுகால் ஓடையை தூர்வாரி சுத்தப்படுத்தி தரக் கேட்டல்.<br>2. சக்திநகரில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா அமைத்துத் தரக் கேட்டல்.<br>3. துர்க்கை அம்மன் **OHT** சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து பணியாளர் பயன்படுத்தும் விதமாக அறை ஒன்று கட்டவும், **OHT** ன் உள்புறம் அடிப்பகுதியில் கடப்பாக் கல் பதித்து தரவும் கேட்டல்.<br>4. யாதவர் கிழமேல் தெரு வடபகுதி , நெட்டப்புளி கீழத்தெரு மேல்பகுதி, இலங்கத்தம்மன் கோவில் மேல் பகுதி, செங்குந்தர் வடக்கு தெரு தென் பகுதி, 8வது வார்டு மெயின் ரோடு வடபகுதி, வடக்கு தோப்புத் தெரு தென் பகுதி ஆகியவற்றில் வாறுகால் அமைத்தல்.<br>5. புதுஅம்மன் கோவில் தெரு – துர்க்கை அம்மன் கோவில் மேல்புற முடுக்கில் சிமெண்ட் சாலை அமைத்தல்.<br>6. யாதவர் கிழமேல் தெரு , இலங்கத்தம்மன் கோவில் தெரு, வடக்கு மற்றும் தெற்கு தோப்புத் தெருவில் சாலை அமைத்தல். | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |
| 25.03. 2022 | 23 | **பொருள் எண்: 20**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 10வது வார்டு உறுப்பினர் திருமதி. M. தமிழ்செல்வி அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. 10வது வார்டு பகுதியில் புதிய ரேசன் கடை மற்றும் அங்கன்வாடி மையம் அமைத்துத் தரக் கேட்டல்.<br>2. தெருக்களில் குடிநீர் இணைப்புக்காக தோண்டப்பட்ட பள்ளங்களை | நிதி நிலைக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் . |

<table>
<tr><td></td><td></td><td>சீரமைக்க கேட்டல்.<br>3. மணலோடைத் தெற்குத் தெருவில் உள்ள கழிவுநீர் ஓடையின் பாலத்தை உயர்த்தித் தரக் கேட்டல்.<br>4. சந்தை மடம் வேளார் தெருவில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>5. திலகர்புரம் தெற்கு தெரு கடைசி தெருவில் புதிதாக பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் ஓடை அமைத்துத் தரக் கேட்டல்.<br>6. பேச்சியம்மன் கோவில் அருகில் உள்ள சிறு மின்விசை குடிநீர் தொட்டியிலிருந்து கழிவுநீர் ஓடை அமைத்துத் தரக் கேட்டல்.<br>7. சந்தை மடம் தெற்கு தெருவில் புதிதாக பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>8. சந்தை மடம் ரோடு கணபதி கடை வீடு காம்பவுண்ட உள்ள தெருவில் புதிதாக பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>9. சந்தைமடம் வடக்கு தெரு மால் அருகே உள்ள கல்பாலம் மற்றும் வசந்தமஹால் அருகே உள்ள கல்பாலம் ஆகியவற்றை சீரமைத்து தரக் கேட்டல்<br>10. தேவமார் அம்மன் கோவில் தெரு புதிய பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td></td></tr>
<tr><td>25.03.<br>2022</td><td>24</td><td>பொருள் எண்: 21<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்வதற்காக சாலை பராமரிப்பு கட்டணம் சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள்21.09.2009ன் படி முந்தைய ஆண்டின் சாலை பராமரிப்பு கட்டணத்திலிருந்து 5% உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள். ஆகையால் ஏற்கனவே உள்ள 2021–22 ஆம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5% உயர்த்தி 2022–23 ஆம் ஆண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) கீழ்காணும் விபரப்படி சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">சாலை விபரம்</th><th colspan="2">0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு</th><th colspan="2">30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு</th></tr>
<tr><th>2021–22 ம் ஆண்டின் கட்டணம்</th><th>உயர்த்தப்பட்ட கட்டணம் 2022–23</th><th>2021–22 ம் ஆண்டின் கட்டணம்</th><th>உயர்த்தப்பட்ட கட்டணம் 2022–23</th></tr>
<tr><td>கருங்கல் சாலை</td><td>1875</td><td>1970</td><td>2980</td><td>3130</td></tr>
<tr><td>தார்சாலை</td><td>4060</td><td>4265</td><td>5130</td><td>5390</td></tr>
<tr><td>சிமெண்ட் சாலை</td><td>4680</td><td>4915</td><td>5760</td><td>6050</td></tr>
</table>
(ந.க.எண்:239/2020/இ1)</td><td>அனுமதி வழங்கப்பட்டது .</td></tr>
<tr><td>25.03.<br>2022</td><td>25</td><td>பொருள் எண்: 22<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் புதிதாக LPG எரிவாயு தகன மேடை அமைத்திட இடம் ஏதுமில்லாததால் மேல அம்பாசமுத்திரம் வருவாய் கிராமம் புல எண் 112/2 ல் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கீழ்புறமுள்ள புல எண் 112 (வாகைகுளம் பொட்டல்) தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தில் மயான பயன்பாட்டிற்கு 50 சென்ட் நிலம் நகராட்சிக்கு பெயர் மாற்றம் செய்திட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதி வழங்கப்பட்டது .</td></tr>
<tr><td>25.03.<br>2022</td><td>26</td><td>பொருள் எண்: 23<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 24.01.2022 ம் நாளிட்ட மின் அஞ்சல் செய்தியில், அம்பாசமுத்திரம் நகராட்சி தொடர்பான வழக்குகளில் மாவட்ட நீதிமன்றத்தில் நகர்மன்ற வழக்கறிராக திரு. சூடாமணி வழக்கறிஞர், அவர்களையும் நியமனம் செய்து கொள்ள</td><td>அனுமதி வழங்கப்படுகிறது .</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பரிந்துரைக்கப்பட்டதின் பேரில் அம்பாசமுத்திரம் நகராட்சி தொடர்பான மாவட்ட நீதிமன்ற வழக்குகளில் திரு. சூடாமணி வழக்கறிஞர் அவர்களை நகர்மன்ற வழக்கறிஞராகவும், சார்பு நீதிமன்ற வழக்குகளில் திரு. S. காந்திமதிநாதன், நகர்மன்ற வழக்கறிஞராகவும் நியமனம் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| 25.03.2022 | 27 | **பொருள் எண்: 24**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் 2022 – 23ம் ஆண்டிற்கான வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி உத்தேச நிதிநிலை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும். | அனுமதி வழங்கப்படுகிறது . |

நகர்மன்ற தலைவர்
அம்பாசமுத்திரம் நகராட்சி